வைக்கிறார்களே தவிர, தகுதி பெற்ற நூலக அதிகாரிகள் இல்லாததால், புத்தகங்கள் அலமாரிக்குள்ளேயே இருக்கின்றன. சில கல்லூரிகளில் நூலகங்கள் லாபரட்டரிகளாகவும், வகுப்பு அறைகளாகவும் இருக்கின்றனவே தவிர, லைப்ரரியாக இல்லை என்பது அரசின் கவனத்திற்கு வந்ததா? அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரக் குறிப்பில்லை. நூலகங்கள் இருந்தால், அவை பயன்படுகிற அளவிற்கு அமைந்திருக்க வேண்டும். அப்படி அமையாமல் குறைபாடுகள் இருந்தால், அது அரசின் கவனத்திற்கு வந்தால், கவனித்து தக்க நடவடிக்கை எடுக்க முயலலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Provident Fund Accounts

* 31 *Q.*—THIRU G. SWAMINATHAN and THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have passed orders requiring the managements of High Schools to contribute to the Provident Fund Accounts of the Non-teaching staff from 1st April 1964 ; and

(*b*) if so, the reasons therefor?

வருங்கால வைப்பீட்டு நிதிக் கணக்கு

திரு. ஜி. சுவாமிநாதன் & திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) 1-4-1964 முதல் கொண்டு ஆசிரியரல்லாத பணியாளர்களின் வருங்கால வைப்பீட்டு நிதிக் கணக்கில் தொகை கொடுக்க வேண்டுமென உயர்நிலைப் பள்ளிகளின் நிர்வாகிகளுக்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளதென்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

THIRU G. SWAMINATHAN : After 1st April 1964, the Managements of many schools are refusing to pay the amount of 3 P. on behalf of the non-teaching staff. Will the Government issue a clarification saying that the Managements should contribute to the Provident Fund of the non-teaching staff, because there is confusion and I have also received complaints from many districts that the Managements are refusing to pay their contribution to the Provident Fund?

25th October 1971]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் இலவசக் கல்வி அளித்ததற்குப் பிறகு பிராவிடண்ட் பண்ட் நிதிக்கு ஆசிரியர்களே செலுத்த வேண்டிய அளவுக்கு செலுத்தி திருப்பிக் கொடுக்கும்போது மறு பகுதியை அரசாங்கமே அளித்துவிடுவது என்ற அளவில் லம்ப் சம் ஆகத் தந்து விடுகிறார்கள். அந்த அளவிற்கு விதிகள் திருத்தப்பட்டன.

"Necessary amendments to the Teachers' Provident Fund Rules have been made to the effect that the Government contribution including the Managements' share shall be pail to the teachers in a single lump-sum amount at the time of the retirement or at the time the teacher's provident fund is closed, equivalent to the amount standing to the credit of the teachers together with the interest. This shall take effect from 1st April 1964 in respect of aided secondary schools and from 1st June 1965 in respect of aided elementary schools. Subsequently it has been clarified in the Government Memorandum dated 22nd June 1971 that these orders will be applicable to non-teaching staff also"

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

THIRU M. RAJAH IYER: Mr. Deputy Chairman, Sir, may I bring to the notice of the Government that in the interim period certain Managements were obliged to pay their contribution towards the Provident Fund of the non-teaching staff? Now that the Government have clarified that there is no distinction between the teaching and the non-teaching staff as far as contribution to the Teachers' Provident Fund is concerned, and in between 1964 and 1971, certain Managements have been obliged to contribute to the Provident Fund because the Government have not sent any definite circular saying that there is no distinction between the teaching and the non-teaching staff, will the Government permit them to withdraw the share that they have contributed and make it clear that from 1st April 1964, the Government are bearing the managements' share of the Provident Fund contribution in respect of the non-teaching staff also?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, எய்டட் செகண்டரி ஸ்கூல்களைப் பொறுத்த வரையில், 1-4-1964-லிருந்தும் எலிமெண்டரி ஸ்கூல்களைப் பொறுத்த வரையில், 1-4-1965-லிருந்தும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதற்கேற்றபடி விதிமுறைகள் திருத்தப்பட வேண்டும். அதற்கு முன் நடைமுறைப்படுத்த இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. திருப்பிக் கொடுப்பதைப் பற்றிய விளக்கங்களுக்குத் தனியாகப் பரிசீலிக்க வேண்டும். தனியாக எழுதினால், அதை ஆராய்ந்து தக்க முடிவுகளை மேற்கொள்ளலாம்.